# திராவிட சினிமா

46

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.



படங்கள் உதவி : ஞானம்





## ‘புன்னகை’ தந்த அங்கீகாரம்!

திராவிடக் கருத்தியல் எவ்வளவு விரைவாக வெகுமக்கள் மனங்களில் இடம் பிடித்ததோ, அதே ரீதியில் அதற்கெதிரான தேசியம் மற்றும் பாரம்பரியங்களின் தாக்குதலையும் எதிர்கொள்ள வேண்டியதானது. அதிலும் தமிழ்த் திரைப்படங்களில் ஏன் தடயங்களைத் தேடும் அவலம் நேர்கிறது என்பதும் இந்த எதிர்த் தாக்குதலின் பொருட்டே. ஏற்கெனவே கண்டது போல, திராவிட மாடல் ஆட்சிக்கான உடனடியான அங்கீகாரம் தமிழ்த் திரையுலகிலிருந்து அறவே பெறப்படவில்லை. இன்று வரை தொடரும் நிலைதான் இந்த அவலம். சில விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை.

தமிழ்த் திரைப்படங்களில் தொடர்ந்து மறுக்கவியலாத உன்னதமாக காந்தியின் உரு தொடர்ந்தது. இன்றும் தொடர்வது, மிகுந்த கவனத்துக்குரியது. திராவிடக் கருத்தியலை / ஆட்சியைக் கவனங்கொள்ள மறுக்க, விமர்சிக்க காந்தி எனும் உரு பெருமளவில் உதவியது. காந்தியார் அந்த வகையில், அனைத்துவித தேசியவாத சக்திகளின் கேடயமானார். அதேவேளையில் அன்று காங்கிரஸ் தேசியவாதம், அவரது இருப்பின் பின்புலத்தில் தனக்கான புனிதத்தைக் கட்டமைக்கத் தவறவில்லை.

காந்தியும் நேருவும், ஏன் சுபாஷ் சந்திரபோஸ் கூட தேசிய புனித உருக்களாக இயல்பாக மாறினார்கள். திரைப்படங்களில் அவர்களின் இருப்பு எந்தச் சார்புமற்றது என இன்றுவரை நம்பப்படுகிறது. தமிழ்த் திரைப்படைப்பாளிகளின் நடுநிலை உன்னதவாதம். சமீபகாலமாகவே, அண்ணல் அம்பேத்கரும், தந்தை பெரியாரும் திரைப்படங்களில் காட்சிப்படுகிறார்கள், ஆனாலும், சார்பற்ற உன்னதங்களாக அல்ல.

### ரிக்‌ஷாக்காரனும் போக்குவரத்தும்

திராவிட மாடல் ஆட்சியின் பகுதியாகக் கருதப்பட வேண்டியதான எம்.ஜி.ஆரே, தனது தேசியவாத திராவிடத்தை, காந்தியையும் அண்ணாவையும் இணைத்தே உருவாக்கிக் கொண்டார். 1971-ஆம் ஆண்டின் ‘ரிக்‌ஷாக்காரன்’ அந்த வகையில் கவனமாக உருவாக்கப்பட்ட காட்சிகள் கொண்டது. அவரது விசாலமான குடிசையில் காந்தியும் அண்ணாவும் பிரதானமாக இருப்புக் கொண்டிருப்பார்கள். திரைப்படத்தின் இறுதிக் காட்சியிலும் கடற்கரைச் சாலையில் அண்ணாவின் ஆட்சி நிறுவிய அத்தனை சிலைகளையும் தவிர்த்து, காந்தி சிலையை பிரதானப்படுத்தி, அண்ணா சாலை அண்ணா சிலையில் பெருந்திரளான மக்கள் திரட்டலோடு முடியும். அதுதான் அண்ணா முகமூடி போட்ட எம்.ஜி.ஆர் திராவிடத்தைத் தனக்கானதாக வடிவமைத்துக் கொண்ட திரைப்படம்.

ஆனால், அவரது எத்தனத்தையும் மீறி தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் உருவானதற்குத் தடயமான பேருந்து ஒன்று தென்படும். எம்.ஜி.ஆ.ருக்குச் சிறந்த நடிகர் விருதான ‘பாரத்‘ வழங்கி வளைக்கப்பட்டதும் அது முதலே. 90 சதவிகித தமிழ் திரைப்படக் கருத்தியல் தெளிவற்ற பொதுப்புத்தி புரட்சிகர இயக்குனர்களின் திராவிட விரோதம், தி.மு.க. விரோதம் மட்டுமே. ஏனெனில் திராவிடச் சிந்தனைகளின் அடிப்படையில் இன்று வரை இயங்கும் அமைப்பு அது மட்டுமே..!

### ஸ்ரீதரும் கே.பாலசந்தரும்

1971-ஆம் ஆண்டின் திரைப்படங்களில் அன்றைய மிகப் பிரபலமான/ போற்றப்பட்ட இயக்குநர்கள் ஸ்ரீதர் மற்றும் கே.பாலசந்தர் ஆகிய இருவரின் திரைப்படங்களை ஆய்வு பொருளாக்கியிருக்கிறேன். இந்தத் திரைப்படப் பரிசீலனையில் ஒரு வியப்பான தகவலைக் கண்டேன். அந்த ஆண்டில், ஜெமினி கணேசன், ஜெய்சங்கர் ஆகியோர் தலா பத்துப் படங்களில் நாயகர்களாக. அவற்றில் கணிசமானவை ஸ்ரீதர் மற்றும் பாலச்சந்தர் இயக்கியவை. இவர்களைப் பார்ப்பனர்கள் என்ற அடையாளத்தில் மட்டும் பொதிந்து விட எண்ணவில்லை. அதை அவமதிப்பு எனக் கருதி தவிர்க்கவில்லை. அவர்கள் ஓரளவில் அந்த அளவிலேயே நிராகரிக்கப்பட வேண்டியவர்கள் இல்லை என்பது கருதியே. அந்த நாட்களின் அறிவார்ந்த சமூகக் கருத்துகளை இவர்களிடம், குறிப்பாக பாலச்சந்தரிடம், கண்டடைந்தவர்கள் ஏராளம்.

> கே.பாலசந்தரும் தன்னைப் பார்ப்பனியத்திலிருந்து விடுவித்துக் கொள்ள விரும்புபவராகத் தன்னை அடையாளங் கொள்ள விரும்பியவர்.

கே.பாலசந்தர் படங்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை பிம்பத்தோடும் ‘அகர முதல எழுத்தெல்லாம்...’ குறட்பாவோடும் தொடங்குபவை. பாலசந்தரும் தன்னைப் பார்ப்பனியத்திலிருந்து விடுவித்துக் கொள்ள விரும்புபவராகத் தன்னை அடையாளங் கொள்ள விரும்பியவர். திரைப்படங்களில் சமூக மாற்ற விழுமியங்களைத் திராவிடச் சிந்தனைகளின் மூலங்களிலிருந்து பெற்றிருப்பதை அறிவிக்கத் தயங்காதவரும்கூட. அந்த முயற்சியின் விளைவுகள் முற்றிலும் அவரை விடுவித்து விட்டதாகச் சொல்ல முடியாது. அது தனித்த ஆய்வுப் பொருள். ஆனால், முயற்சி அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஸ்ரீதரின் ‘அவளுக்கென்று ஒரு மனம்‘ ஒரு நவீனமான, சுதந்திர உணர்ச்சி கொண்ட பெண்ணை நாயகியாக்கியுள்ளது. ஒரே ஆண் மீது காதல் கொள்ளும் பெண்களில் ஒருவரை எதிர்மறைப் பாத்திரமாக்கி விடாமல், மற்றவளின் வாழ்வு பலியாவதைத் தவிர்க்க, தன்னைத் தியாகம் செய்கிறாள். திரைப்படத்தின் நாயகத்துவம் பெண் மையம் கொள்கிறது. இதன் பொருட்டுச் சித்தரிக்கப்படும் காட்சிகள், பெண்ணின் விடுதலையுணர்ச்சியை அங்கீகரிக்கப்படுபவை ஆகின்றன. கலைஞர் உருவாக்கிய திராவிட நவீனப் பெண்ணின் வடிவில் இருக்கிறாள் நாயகத்துவம் பெற்ற நாயகி. ஜெமினி, பாரதி, முத்துராமன், காஞ்சனா, நாகேஷ் ஆகியோர் நடித்திருந்தனர்.

### பாலசந்தர் காட்டிய சாதனைகள்

பாலசந்தரின் ‘புன்னகை’ திரைப்படம் கவனத்தை ஈர்த்த ஒன்று. கதைக்களம் காந்தியாரின் சத்தியம்/ உண்மை என்பவற்றை அடிபிசகாமல் கைக்கொள்ளும் ஒருவர் எதிர்கொள்ளும் சோதனைகள்தான். ஜெமினி கணேசன், முத்துராமன், நாகேஷ், ஜெயந்தி ஆகியோர் நடித்திருந்தனர். பாலச்சந்தரின் பாணியிலான அறிமுகக் காட்சிகளிலேயே உண்மை பேசுவது எத்தனை பாதகமான விளைவுகளை உருவாக்குகிறது என்பதை நிறுவும் துண்டுக் காட்சிகள் உள்ளன.

அந்தக் காட்சிகள் ஒன்றில் பெண் பார்க்கும் நிகழ்வு. மாப்பிள்ளை வீட்டார், வழக்கமான பாணியில் பெண்ணிடம் என்ன படித்திருக்கிறாய் எனக் கேட்கிறார்கள். பெண், பி.யூ.சி. வரை என்கிறாள். ஏன் மேலே படிக்கலையா என்ற கேள்விக்கான பதிலாக பெண், ‘பி.யு.சி வரைதான் பெண்களுக்குக் கல்லூரிப் படிப்பிற்குக் கட்டணமில்லை’ என்கிறாள். கலைஞரின் தொடக்க காலப் பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம் ‘பெண்ணுக்குப் புகுமுக வகுப்பு வரை கல்விக் கட்டணமில்லை‘ எனும் திட்டம். திட்டம் சமூகத்தின் நினைவிலியில் பதிந்துவிட்டதற்கான சான்று.

திரைப்படத்தில் நண்பர்கள் நால்வர் பொறியியல் பட்டம் பெறுகின்றனர். அந்தப் பட்டமளிப்பு, வேலை, வாழ்வு தொடர்பான உரையாடலில் அண்ணாவின் பட்டமளிப்பு விழாப் பேருரை தொடர்புறுத்தப்பட்டிருக்கும். கர்மயோகியான நாயகன், ஒரு பாலியல் வல்லுறவுக்குள்ளாகி கர்ப்பமுறும் பெண்ணை மணந்து கொள்கிறான். அரசு அலுவலகத்தில் கொண்டாடப்படும் ஆயுத பூஜை விழாவை ஆட்சேபிக்கிறான். அண்ணாவின் ஆட்சியிலேயே அரசு அலுவலகங்களில் கடவுளர் படங்கள் நீக்கப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது, இது போன்ற விழாக்களைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இன்னொரு காட்சியில் நாகேஷ், ‘ஒத்திக் கொள்ளச் சொல்லும் ‘பார்ப்பனரிடம்,’ மனுஷன் சந்திரமண்டலத்திலேயே கால் வைத்து விட்டான், இன்னும் பழைய பஞ்சாங்கமா இருக்கியே போயா’ என்பார். ஆனால், திரைப்படம் அவன் பேசும் உண்மை அவனை அவதிக்குள்ளாக்கி நோயுற்ற மரணத்தைப் பரிசளிக்கிறது என்ற செய்தியுடனே நிறைவுபெறும். ஆனாலும் வல்லுறவுக்குள்ளான பெண்ணின் மீது குற்றவுணர்ச்சி சிலுவையையேற்றாமல் இயல்பாக வாழ அனுமதித்த வகையில் திரைப்படம் பெரியாரிய பெண்ணுரிமைச் சிந்தனையை ஏந்தியிருந்தது.

...படம் விரியும்

## பா.ஜ.க.வின் வசூல் சூத்திரம்!

தேர்தல் பத்திரங்கள் சட்டம், அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருப்பதாக உச்சநீதிமன்றம் கடந்த வாரத்தில், அதை ரத்து செய்து உத்தரவிட்டது. தேர்தல் பத்திரங்கள் சட்டம் நடைமுறைக்கு வந்த 2018-ஆம் ஆண்டு முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், 9,188 கோடி ரூபாயை அரசியல் கட்சிகள் நன்கொடையாகப் பெற்றிருக்கின்றன. இதில் பா.ஜ.க மட்டுமே 5,271 கோடி ரூபாய் பெற்றுள்ளது. 2022-23 ஒரு ஆண்டில் மட்டும் பா.ஜ.க 1,294 கோடி ரூபாய் பெற்றுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் 171 கோடி ரூபாய் பெற்றுள்ளது. மற்ற கட்சிகள் அனைத்தும் சேர்ந்து பெற்ற நன்கொடையை விட, பா.ஜ.க மட்டும் எப்படிக் கூடுதலான நன்கொடையைப் பெற்றது என்பதே பலருக்கும் இருந்த குழப்பம். அந்தக் குழப்பத்தைத் தெளிவு படுத்தியிருக்கிறது ‘நியூஸ் லாண்டரி’ ஊடகம். அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்ற ஒன்றிய அரசு அமைப்புகளின் விசாரணை வளையத்துக்குள் இருக்கிற சுமார் 30 நிறுவனங்கள் 335 கோடி ரூபாய்க்கான தேர்தல் பத்திரங்களை வாங்கி, பா.ஜ.க.வுக்குக் கொடுத்திருப்பது அம்பலமாகியுள்ளது.

அதுமட்டுமல்லாமல் சில நிறுவனங்கள், வருமான வரி, அமலாக்கத்துறை ஆகியவற்றின் சோதனைக்குப் பிறகு அதிக நன்கொடை வழங்கியுள்ளன. நன்கொடை வழங்காத சில நிறுவனங்கள் சோதனையை எதிர்கொண்டுள்ளன. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு டிஸ்டில்லரி நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு ஜாமின் கிடைத்த உடன் நன்கொடை வழங்கியிருக்கிறார்கள். பா.ஜ.க.வுக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் நன்கொடையை வாரி வழங்கும் சூத்திரம் இதுதானா என்று சமூக ஆர்வலர்களும், அரசியல் தலைவர்களும் கேள்வி எழுப்பியிருக்கின்றனர். பதில்தான் இன்னும் வரவில்லை !

## ஃப்ளாஷ்பேக்



### ‘முரசொலி’யில் கலைஞர்!

1981-ஆம் ஆண்டில் மதுரை வருகை தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலை நேர எழுத்துப் பணி மற்றும் செய்தியாளர்கள் சந்திப்புக்குப் பின் ‘முரசொலி’ அலுவலகம் வந்தார். ஆசிரியர் குழு செயல்படும் பகுதிக்கு வந்த கலைஞர் அவர்கள் அன்றைய ‘உடன்பிறப்புக் கடிதம்’, அரசியல் பெட்டிச் செய்தி ஆகியவை குறித்து, பொறுப்பாசிரியர் கயல் தினகரன் அவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.



கூடலரசன்

எந்தெந்தச் செய்திகள் எப்படி இடம்பெற வேண்டும் என்பது பற்றி கூறி விட்டு, அருகில் நின்ற என்னிடம் பேட்டி தயார் செய்துகொண்டு வரும்படி சொல்லிச் சென்றார். அங்கு இருந்த அச்சுக் கோர்ப்பாளர் ஞானமணியிடம் நலம் விசாரித்து விட்டுப் புறப்பட்டார். அப்படியான தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**-தி.கூடலரசன், பத்திரிகையாளர், மதுரை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### கருத்துச் சோலை!

**1950-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், செங்கல்பட்டு மாவட்ட முதல் மாநாடு காஞ்சிபுரம் நகரில் நடைபெற்றது. அப்போதே தமிழ்நாட்டின் நெசவுத் தொழிலை, வடநாடு வஞ்சிப்பதாக மாநாடு கண்டனம் தெரிவித்தது. ‘காஞ்சி மாநாடு ஒரு கருத்துச் சோலை. உண்மை வீரர்களால் எதையும் உருவாக்க முடியும் என்கிற காட்சிச் சித்திரம். வளர்ந்து வரும் நமது கழகத்துக்கு மக்கள் காட்டும் மதிப்பின் சின்னம் என ‘திராவிட நாடு’ தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 397




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131